செ.வெ.எண்.97/2021 நாள்: 25.06.2021

**தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம் - மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின், மாவட்ட அளவிலான மறுசீராய்வு ஆய்வுக்கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வெ.பத்ரி நாராயணன், இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று (25.06.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் திருமதி.சரஸ்வதி ரங்கசாமி அவர்கள், துறைசார்ந்த அலுவலர்களிடையே ஆய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில்:-

கன்னியாகுமரி மாவட்ட குழந்தை உரிமைகள் பாதுகாப்பு அலகின் பணிகள், செயல்பாடுகள் மற்றும் குழந்தைகள் நலன் சார்ந்த பணிகளில் ஈடுபடும் பிற துறைகளின் செயல்பாடுகள் குறித்தும், கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் குறித்தும், ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், குழந்தைகள் நலன் சார்ந்த பணிகளில் ஈடுபடும் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், அவ்வாறு செயல்பட்டால்தான் நமது மாவட்டத்தை குழந்தைகள் பாதுகாப்பு மாவட்டமாக உருவாக்க முடியும். குழந்தைகள் பிரச்சனைகள் மற்றும் பாலியல் தொடர்பான புகார்கள் ஏதேனும் பெறப்பட்டால், மாவட்ட குழந்தைகள் நலக்குழு மற்றும் காவல்துறையினர் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து குழந்தைகளுக்கான மறுவாழ்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடக்கூடிய அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மேலும், குழந்தைகள் நலன் சார்ந்த சட்டங்கள் குறித்த பயிற்சியினை துறை அலுவலர்களுக்கு, மாவட்ட குழந்தை உரிமைகள் பாதுகாப்பு அலுவலகம் மூலமாக வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் மற்றும் தனியார் இல்லங்களில் உள்ள சிறார் மற்றும் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளதா என்பது குறித்தும், கொரோனா 3-வது அலையில் அதிகளவில் குழந்தைகளை தாக்கும் என்பதால் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் சுகாதாரத்துறையினர் இணைந்து வீடு, வீடாக சென்று பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பாதுகாக்க விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, 3-வது அலையில் குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கினால் அவற்றை அனைத்து பெற்றோரும் ஏற்று, தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ள முன்வரும் வகையில் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், தங்கள் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள் ஏற்படாவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. கொரோனா நோய் தொற்றினால் பெற்றோரை இழந்த பாதுகாப்பு அல்லது பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் கண்டறிந்து உரிய கள ஆய்வு மேற்கொண்டு அத்தகைய குழந்தைகளுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழங்குதல், நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 15 வயதிலிருந்து 18 வயதுக்குட்பட்ட தொழிலாளர்கள் மறுவாழ்வுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தொழிலாளர் நலத்துறை அலுவலர்களிடம் கேட்கப்பட்டது.

கொரோனா தொற்று பொதுமுடக்க காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளை சார்ந்த 10 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், குழந்தை திருமணத்தினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் மனநிலைமையினை குறித்தும், சட்டத்திற்கு புறம்பாக குழந்தை திருமணம் நடத்தப்பட்டால் வழங்கப்படும் தண்டனை குறித்து பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். இவ்வாறு தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் திருமதி.சரஸ்வதிரங்கசாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்:-

இளைஞர் நிதிச்சட்டம் 2015-ன் படி நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 72 குழந்தைகள் நல இல்லங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதில் ஒரு அரசு குழந்தைகள் காப்பகம், அரசு உதவி பெறும் காப்பகமும், மீதமுள்ள குழந்தைகள் காப்பகங்கள் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இளைஞர் நிதிச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் கொரோனா தொற்றிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்காக, மாவட்ட நிர்வாகத்தின் வாயிலாக 109 பெற்றோர்களை இழந்த குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கருத்துரு தயார் செய்யப்பட்டு, மேல்நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது பல்வேறு குழந்தை காப்பகங்களில் பணிபுரியும் 876 பணியாளர்களில் 740 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும், மீதமுள்ளவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா 3-ஆம் அலையிலிருந்து குழந்தைகளை காக்கும் விதமாக மாவட்டத்திலுள்ள 72 குழந்தை இல்லங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, குழந்தைகள் இல்லங்களிலிருந்து பாதுகாப்பாக பெற்றோரிடம் சென்ற குழந்தைகள் குறித்தும், அவர்களின் குடும்ப சூழ்நிலை மற்றும் உடல் ஆரோக்கியம் குறித்தும் கேட்டறியப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் திரு.வி.ராமராஜ், இணை இயக்குநர் திரு.ராஜ்சரவணகுமார், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.மு.ஜெயபிரகாஷ், மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அலுவலர் திருமதி.இரா.சரோஜினி, அரசுத்துறை அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், காவல்துறை அலுவலர்கள், குழந்தைகள் நலக்குழு மற்றும் இளைஞர் நீதிக்குழும உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் நலன் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.